# மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2021-2022-ம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கை

## (DMFT - Annual Budget)

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை திட்டங்களின் வரவு செலவு அறிக்கையின் விபரம் பின்வருமாறு.

மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண். 764/2017-கனிமம், நாள்.12.09.2017-ன்படி மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையானது உருவாக்கப்பட்டு 31.03.2022-வரை **ரூ.4,49,39,797/- (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று தொன்னூற்று ஏழு மட்டும்)** வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் ஏதும் வழங்கப்படவில்லை.

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியில் ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 ஆண்டிற்கு மட்டும் **ரூ.97,91,495/- (ரூபாய் தொன்னூற்று ஏழு இலட்சத்து தொன்னூற்று ஒன்றாயிரத்து நானூற்று தொன்னூற்று ஐந்து மட்டும்)** கனிமக் கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண்.02/2020-டிஎம்எப்டி, நாள்.17.08.2020, ந.க.எண்.02/2020-டிஎம்எப்டி, நாள்: 16.11.2020 மற்றும் ந.க.எண்.790/டிஎம்எப்டி/2021, நாள்.28.12.2021-ன்படியும் தற்காலிக நியமனம் செய்யப்பட்ட கணக்காளர், கணிணி இயக்குபவர் மற்றும் நீதிமன்ற தொடர்பு அலுவலர் ஆகியோருக்கு **ரூ.2,39,546/- (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து ஐநூற்று நாற்பத்து ஆறு மட்டும்)** ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியிலிருந்து நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட 6% நிதியிலிருந்து 1% தொகையை கனிம அறக்கட்டளையின் மாநில அளவிலான கண்காணிப்பு பணிகளுக்காக பயன்படுத்த

இயக்குநர் அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ள தனி வங்கி கணக்கில் மாதந்தோரும் செலுத்துமாறு அரசாணை பல்வகை எண். 112, தொழில் (எம்.எம்.டி-1) துறை நாள்: 30.05.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 01.04.2020 முதல் 31.03.2021 வரையிலான காலத்திற்கு வசூல் செய்யப்பட்ட தொகையில் 1% தொகையான **ரூ.77,453/-** (ரூபாய் எழுபத்து ஏழாயிரத்து நானூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) இயக்குநர் அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ள தனி வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை அவர்களின் நேர்முக கடிதம் ந.க.எண்.3946/LC/2015, நாள்.17.03.2020-ன்படி ஒவ்வொரு மாதமும் வசூல் செய்யப்படும் தொகையில் நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட 6% தொகையை தனி வங்கி கணக்கிற்கு மாறுதல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளை வங்கி கணக்கு தொடங்கிய நாள் 26.09.2017 முதல் 31.03.2022 வரை நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டது போக மீதமுள்ள தொகை **ரூ.12,90,645/- (ரூபாய் பன்னிரண்டு இலட்சத்து தொன்னூராயிரத்து அறுநூற்று நாற்பத்து ஐந்து மட்டும்)** தனி வங்கி கணக்கிற்கு **(மாநில பாரத வங்கி, வணிகவரி வளாக கிளை, சேமிப்பு கணக்கு எண்.39383933861)** மாற்றப்பட்டுள்ளது.

2021-2022 நிதியாண்டில் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டுள்ள தொகை விபரம் பின்வருமாறு

**2021-2022**

| மாதம் | சீனியரேஜ் தொகை மூலம் பெறப்பட்ட அறக்கட்டளை நிதி (ரூபாயாக) | நீதிமன்றம் மூலம் அபராத தொகையாக பெறப்பட்ட அறக்கட்டளை நிதி (ரூபாயாக) | மொத்தம் (ரூபாயாக) |
|---|---|---|---|
| ஏப்ரல்-2021 | 6,41,035 | | 6,41,035 |
| மே-2021 | 1,62,738 | | 1,62,738 |
| ஜீன்-2021 | 4,48,449 | | 4,48,449 |
| ஜீலை-2021 | 6,24,175 | | 6,24,175 |

| | | | |
|---|---|---|---|
| ஆகஸ்ட்-2021 | 6,52,751 | | 6,52,751 |
| செப்டம்பர்-2021 | 6,26,440 | | 6,26,440 |
| அக்டோபர்-2021 | 9,22,899 | | 9,22,899 |
| நவம்பர்-2021 | 5,19,240 | 60,000 | 5,79,240 |
| டிசம்பர்-2021 | 12,40,606 | 1,17,500 | 13,58,106 |
| ஜனவரி-2022 | 9,71,542 | 15,000 | 9,86,542 |
| பிப்ரவரி-2022 | 11,19,420 | 1,15,000 | 12,34,420 |
| மார்ச்-2022 | 14,34,700 | 1,20,000 | 15,54,700 |
| **மொத்தம்** | **93,63,995** | **4,27,500** | **97,91,495** |

இவ்வறிக்கையானது மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

13/12

தலைவர், மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை / மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.

13/12/22 13/12/22 13/12/22

21-22 - Annual Budget